SMALL BUSINESS
ENTERPRISE CENTRE
www.brampton-business.com

33 Queen St. West, 1ம் மாடி, Brampton, ON L6Y 1L9
தொலைபேசி: 905-874-2650 தொலைநகல்: 905-874-2670

# இல்லத் தொழில் விளக்கத்தொகுப்பு

**ஒரு இல்லத் தொழிலின் வரையறைகளாக பின்வருவனவற்றை பிராம்ப்டன் நகரம் பொதுவாக ஏற்கின்றது.**

1. பின்வரும் தேவைகளிற்கும் கட்டுப்பாடுகளிற்கும் உட்பட ஒரு தனிக்குடும்ப இணைப்பகன்ற வீட்டில் ஒரு இல்லத் தொழில் நடாத்தப்படக்கூடியதாகும்;

(a) இல்லத்தின் குடியிருப்பாளர் அல்லது அங்கு வசிக்கும் அவரது குடும்ப அங்கத்தவர்கள் மூலம் மட்டுமே அது நடத்தப்படுகின்றது;

(b) இல்லத் தொழிலானது, தனிப்பட்ட உறைவிடத்திற்கு கீழ்ப்படியானதாகவும், மொத்த வீட்டு நிலப்பரப்பின் 15 சதவிகிதத்திற்கு மேலான அளவை எடுக்காததாகவும் இருக்கவேண்டும். இது அடித்தளவறை (பேஸ்மன்ட்) அல்லது நிலவறையை தவிர்த்ததாகும்;

(c) சார்ந்திருக்கும் கட்டிடத்தில் அல்லது தனிப்பட்ட வாகனக்கூடத்தில் (கராஜ்) இல்லத் தொழில் நடாத்தப்படக்கூடும்;

(d) தனிப்பட்ட வீடு என்ற முறையில் இல்லத்தின் வெளிப்புற அம்சங்களிற்கு எவ்வித மாற்றங்களும் காணப்படலாகாது;

(e) இல்லத்தில் தயாரிக்கப்பட்ட சரக்குகள், பாண்டங்கள், அல்லது வாணிபப் பொருட்களைத் தவிர வேறெந்த பொருட்களும் விற்பனைக்கென விளம்பரப்படுத்தக்கூடாது;

(f) இல்லத் தொழில் சம்பந்தப்பட்ட மூலப்பொருட்கள், சரக்குகள், அல்லது வாகனங்கள் வெளியில் சேமிக்கப்படக்கூடாது.

(g) இல்லத் தொழிலுடன் சம்பந்தப்பட்டதாகவிருக்கும் இடப்பரப்பில் ஒரு நபருக்கு மேற்பட்டோர்கள் - அங்கு வசிக்கும் குடும்ப அங்கத்தவர்களைத் தவிர – வேலைக்கு அமர்த்தப்படக்கூடாது;

மறுபக்கம்…

(h) கட்டிடத்தில் ஒரு அடையாள அட்டை மட்டுமே பொருத்தப்பட அனுமதிக்கப்படுகின்றது; இது 0.15 சதுர மீற்றர்கள் பரப்பளவிற்கு கூடியதாக இருத்தலாகாது;

(i) ஒரு வீட்டில் ஒரு இல்லத் தொழிலிற்கு மேல் அனுமதிக்கப்படமாட்டாது; அத்துடன்,

(j) பின்வருபவை இல்லத் தொழில் என்ற முறையில் அனுமதிக்கப்படமாட்டாது.

- (i) மோட்டார் வாகனங்கள் அல்லது உற்தகன இயந்திரங்களின் திருத்தங்கள் மற்றும் பழுதுபார்த்தல்; அத்துடன்
- (ii) அதன் செயற்பாட்டால் தொல்லை உண்டுபண்ணும் அல்லது உண்டுபண்ணக்கூடிய ஏதேனுமொரு உபயோகம்; அல்லது இரைச்சல், அதிர்வு, வாயு, தூமங்கள் அல்லது ஆட்சேபமான துர்நாற்றங்கள் என்பவற்றின் வெளியீட்டால் தீங்கு விளைவிக்கக்கூடிய உபயோகம்; அல்லது விரும்பத்தகாத அல்லது தீங்கு விளைவிக்கக்கூடிய வியாபாரம், வர்த்தகம் அல்லது தயாரிப்பு என்று கருதப்படக்கூடிய உபயோகம்.
- (iii) தசையுருவல் அல்லது உடலுருவல் ஸ்தாபனம்.

2. பின்வரும் தேவைகளிற்கும் கட்டுப்பாடுகளிற்கும் அமைய, ஒரு அலுவலகமானது ஒரு குடியிருப்பு தொகுதியினுள் இல்லத் தொழிலாக நடாத்தப்படக்கூடும்:

(a) ஒரு குடியிருப்பு தொகுதியில் ஒரு அலுவலகத்திற்கு மேல் அனுமதிக்கப்படமாட்டாது;

(b) இந்த அலுவலகமானது, வைத்தியர், பல்வைத்தியர், உடலியங்கியல் சிகிச்சையாளர், தசையுருவல் செய்பவர், முதுகெலும்பு சார்ந்த சிகிச்சையாளர், மனநோய் வைத்தியர், ஊடுகதிர் (எக்ஸ்-ரே) அல்லது செவியுணரா ஒலி (அல்ட்ராசவுன்ட்) இயக்குநர் போன்றவொரு சுகாதார சேவை நடத்துனரின் அலுவலகமாக இருத்தலாகாது;

(c) ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு வாடிக்கையாளரிற்கு மேல் இருக்காத வண்ணம் அலுவலகம் அமையவேண்டும்;

(d) அலுவலகத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட மொத்த பரப்பளவு 15 சதுர மீற்றர்களிற்கு மேல் இருத்தலாகாது;

(e) வீட்டில் குடியிருப்பவர் அல்லது அங்கு வசிக்கும் அவரது குடும்ப அங்கத்தவர்களின் மூலம் மட்டுமே நடாத்தப்படுவதாயும் அலுவலகத்துடன் சம்பந்தப்பட்ட வேறெந்த ஊழியரும் அவ்விடப்பரப்பில் இருக்கலாகாது;

(f) வெளிப்புற அடையாள அட்டை அனுமதிக்கப்படமாட்டாது;

(g) சரக்குகள், பாண்டங்கள், அல்லது வாணிபப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டோ விற்பனைக்கென விளம்பரப்படுத்தப்பட்டோ அல்லது இடப்பரப்பில் விற்பனைக்கென வைக்கப்பட்டோ இருக்கலாகாது; அத்துடன்

(h) அதன் செயற்பாட்டால் தொல்லை உண்டுபண்ணும் அல்லது உண்டுபண்ணக்கூடிய, அல்லது இரைச்சல், அதிர்வு, அல்லது ஆட்சேபமான துர்நாற்றங்கள் என்பவற்றின் வெளியீட்டால் தீங்கு விளைவிக்கக்கூடிய, அல்லது விரும்பத்தகாத அல்லது தீங்கு

மறுபக்கம்…

விளைவிக்கக்கூடிய வியாபாரம், அல்லது வர்த்தகமாக அமையும் ஒரு அலுவலகமானது அனுமதிக்கப்படமாட்டாததொன்றாகும்.

**இல்லத் தொழில்களின் வட்டார ஒதுக்கற் கோரிக்கைகளைக் குறித்து மேலதிக விபரங்களிற்கு, பிராம்ப்டன் நகரத்தின் வட்டார (Zoning Deprtment) ஒதுக்கற் துறையை 905-874-2090 இல் அழையுங்கள்.**